Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
DOI: 10.63300/tmi12n062026.06
Vol. 12, No. 06 (2026) 12 06 2026 47–61 TIRJTS-2026-0012

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

குறுந்தொகையில் ஒப்பனைக் கலை

The Art of Adornment in Kuruntokai

Dr. R. SRIVIDHYA[1,*]

[1] Associate Professor Subramania Bharathi School of Tamil Language and Literature Pondicherry University, Puducherry – 605014.

***Corresponding author:** Dr. R. SRIVIDHYA, srividhyanet@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0012

Peer review
Double-blind peer review

Keywords
Art of Adornment
Aesthetic Art
āyiḻai
cēyiḻai
Toṭiyōḷ
Ōri
Ear Ornament
Wrist Ornament.

ABSTRACT

The art of adornment is one of the various forms of aesthetic art developed by the early Tamils. Sangam poets, while identifying and describing the hero and heroine, often referred to them through terms associated with ornaments, such as āyiḻai, cēyiḻai, and toṭioḷ. The ancient Tamils, who lived a life closely connected with nature, used flowers and leaves to adorn their hair, decorate their ears. They also wore ornaments made of gold and conch shells. Although the words kaṇṇi and kōtai generally refer to garlands, each term acquires a specific meaning according to the part of the body on which the garland is worn. A garland worn on the head is called kaṇṇi, whereas a garland worn on the chest is called kōtai. Similarlly, the term toti refers to a shoulder ornament when worn by a man and to a wrist ornament when worn by a woman. Sangam literature also demonstrates the subtle and nuanced use of different expressions to distinguish a woman's hair from a man's hair-(Ori). This article, entitled "The Art of Adornment in Kuruntokai", is structured to reveal the aesthetic nuances of such expressions and to highlight the aesthetic sensibilities of the ancient Tamils.

How to cite this article: Dr. R. SRIVIDHYA (2026). குறுந்தொகையில் ஒப்பனைக் கலை. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 47–57. https://doi.org/10.63300/tmi12n062026.06
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் இரா.ஸ்ரீவித்யா,
இணைப் பேராசிரியர்,சுப்பிரமணிய பாராதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 14. ,மின்னஞ்சல்: srividhyanet@gmail.com

ஆய்வுச் சுருக்கம்: தமிழர்கள் வளர்த்தெடுத்த அழகுக் கலைகளுள் ஒப்பனைக் கலையும் ஒன்றாகும் சங்கப்புலவர்கள் தலைவன் தலைவியை அடையாளப் படுத்தும்போதும் விளக்கும்போதும் ஆயிழை, சேயிழை, தொடியோள் என அணிகலன்களோடு இணைந்து அடையாளப்படுத்தியுள்ளனர் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்த பழந்தமிழர்கள் தங்களின் கூந்தலில் சூடிக் கொள்ள, மார்பில் அணிந்து கொள்ள, ஆடையாக உடுத்திக் கொள்ள, காதணியாய்ச் சூட்டிக் கொள்ள மலர்களையும் தழைகளையும் பயன்படுத்தியுள்ளனர். பொன், சங்குகளால் ஆன அணிகலன்களையும் அணிந்துள்ளனர். கண்ணி, கோதை ஆகிய சொற்கள் மாலையைக் குறித்தாலும் அணிகின்ற இடத்திற்கேற்ப ஒவ்வொரு பெயரைப் பெறுகின்றன. தலையில் அணியும் மாலை கண்ணியாகும். மார்பில் அணியும் மாலை கோதையாகும். தொடி என்கிற ஒரு சொல் ஆண் அணிகிற பொழுது தோளணியாகவும் பெண்ணின் அணிகலனாகும் போது கையணியாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. பெண்ணின் தலைமயிரிலிருந்து ஆணின் தலைமயிரை வேறுபடுத்துவதற்கு (ஓரி) வெவ்வேறு சொல்லாட்சிகளைப் பயன்படுத்தும் நுட்பமான பிரதியாகச் சங்க இலக்கியம் காட்சியளிக்கிறது. அத்தகைய சொல்லாட்சியின் நயங்களையும் தமிழர்களின் அழகியல் உணர்வையும் புலப்படுத்தும் வகையில் ‘‘**குறுந்தொகையில் ஒப்பனைக்கலை**” என்ற இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச் சொற்கள்:ஒப்பனைக்கலை, அழகுக்கலை, ஆயிழை, சேயிழை, தொடியோள், ஓரி, காதணி, கையணி.

முன்னுரை

மனிதர்களின் நாகரிக வளர்ச்சியில் பல்வேறு வகையான கலைகள் தோற்றம் பெற்றன. பொதுவாக மனிதர்கள் தங்களின் சிந்தனை அல்லது உணர்ச்சிகளின் வெளிப்பாட்டை ஏதேனும் ஒரு பௌதீக ஊடகத்தின் வாயிலாக வெளிப்படுத்த முயலும்போது கலைகள் உருவாகின்றன. காட்டாண்டி நிலையில் இருந்த மனிதன் உழைப்புச் செயல்பாட்டில் ஈடுபடத் தொடங்கிய வேளையில் கலைகள் உருப்பெற்றதாக மார்க்சிய அறிஞர்கள் விளக்குகின்றனர். வேட்டைச் சமூகத்தில் விலங்குகளை வேட்டையாடுவதற்கான ஒத்திகை முயற்சியிலேயே நடனம் முதலான கலைகள் தோற்றம் பெற்றன. பொதுவாகக் கலைகளைக் கவின் கலைகள், பயன் கலைகள் என்றும் காட்சிக்கலை, இலக்கியக்கலை, நிகழ்த்துக்கலை, ஊடகக்கலை என்றும் பல வகைகளாக வகைப்படுத்துகின்றனர். பயனை விட அழகியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேளையில் நுண்கலைகள் உருவாகின்றன. ஓவியக்கலை, சிற்பக்கலை,

கட்டிடக்கலை முதலானவை நுண்கலைகள் அல்லது கவின்கலைகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. நாடகக் கலை, ஆடற்கலை, பாடற்கலை முதலானவை நிகழ்த்துக்கலையாகவும், சினிமா, தொலைக்காட்சி , குறும்படம், இதழியல் முதலானவை இலக்கிய ஊடகக் கலையாகவும் புதினம், கவிதை, உரைநடை முதலானவை இலக்கியக் கலையாகவும் அறியப்படுகின்றன. மனிதர்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ள முயலும் போது உருவான ஒப்பனைக்கலை கவின் கலைகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. பழங்காலத் தமிழர்கள் இசைக்கலையிலும் ஓவியக்கலையிலும் சிற்பக்கலையிலும் கட்டிடக் கலையிலும் மேம்பட்டு விளங்கியதைத் தமிழிலக்கிய கருவூலங்கள் தெள்ளிதின் உணர்த்துகின்றன. ஆண்களும் பெண்களும் தங்களை ஒப்பனை செய்து கொள்கின்ற பாங்கினைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பல நிலைகளில் காட்சிப்படுத்தியுள்ளன. அவ்வகையில் பழந்தமிழர்களின் வாழ்வியலோடு ஒப்பனைக்கலை எவ்வாறு பின்னிப் பிணைந்திருந்தது என்பதைக் குறுந்தொகை வாயிலாக ஆராய்கின்ற முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது.

தலைவன் – தலைவியரின் ஒப்பனை நலம்

‘பூப்போல் உண்கண்; பொன் போல் மேனியை; மாண்வரி அல்குல் குறுமகள்’ (குறுந்.101) எனத் தலைவியும் ‘மலைச் செஞ்சாந்தின் ஆர மார்பினன் ; சுனைபூங் குவளை சுரும்பார் கண்ணியன்’ (குறுந்.321) எனத் தலைவனையும் காட்சிப்படுத்தும் புலவர்கள் அவர்களை ஒப்பனை நலத்துடன் அறிமுகப்படுத்துவதைக் காண முடிகிறது. குவளை, ஆம்பல், அசோகு முதலான தாவரங்களின் தழையை ஆடையாக உடுத்தியதிலிருந்து ஆடைக்குக் கஞ்சியிட்டு அணிந்தது வரை குறுந்தொகை பல்வேறு பரிமாணங்களில் தலைவன் – தலைவியரின் ஒப்பனை நலத்தைச் சித்தரிக்கின்றது. ஒள்ளிய நுதலும் தோகையென விரியும் கூந்தலும் தொய்யில் வரையப் பெற்ற பணைத்தோளும், மேகலை அணிந்த அல்குலும், சிலம்பு அணிந்த பாதமும் உடையவளாகக் குறுந்தொகைத் தலைவி காட்சிப்படுத்துகிறாள். கழலணிந்த தலைவன் முதல் தோள்வளை அணிந்த ஆறலைக்கள்வர் வரை சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் அணிகலன்கள் அணிந்திருப்பதையும் குறுந்தொகையில் காண முடிகிறது.

‘‘முலையே முகிழ் முகிழ்த்தனவே தலையே

குளைஇய மென்குரல் கிழக்கு வீழ்ந்தனவே

செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின

சுணங்கும் சில தோன்றினவே, அணங்கு என

யான் தன் அறிவல் தான் அறியலளே.” (குறுந். 337)

‘தலைவிக்கு நகில்கள் மொட்டுக்கள் போல் அரும்பின; தலையில் கிளைத்து வளர்ந்த மென்மையான மயிர்த்திரள் கீழ்நோக்கி நீண்டு தாழ்ந்தன. வெண்பற்கள் விழுந்து மறுபடியும் செறிவாய் வரிசைப்பட முளைத்தன. தேமலும் தோன்றின.’ என்று பேதைப் பருவத்திலிருந்து மங்கைப் பருவம் நோக்கி வளர்ந்த தலைவியின் மேனி வேறுபாட்டை பொதுக்கயத்துக் கீரந்தையாரின் பாடல் நுட்பமாக வெளிப்படுத்துகிறது. கூந்தல், நுதல், கண், எயிறு, தோள் எனத் தலைவி உள்ளிட்ட மகளிரின் கேசாதி பாத சித்திரிப்புகளையும் ஆடை, அணிகலன்கள் தொய்யில் முதலான பழந்தமிழரின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும் பின்வரும் உட்தலைப்புகளின் கீழ் இக்கட்டுரையில் வகைப்படுத்த இயலுகிறது.

கூந்தல்

கூந்தல், ஓதி, கதுப்பு, குரல் எனப் பலபெயர்களில் தலைவியின் கூந்தல் வருணிக்கப்பட்டுள்ளது. அடர்ந்த கருத்த கூந்தல் ‘பல்லிருங்கூந்தல்’ (குறுந். 19) என்றும் நீளமான சுருளுடைய கூந்தல் ‘வார் உறு வணர்கதுப்பு’ (குறுந்.82) என்றும், மை போன்ற கரிய கூந்தல் ‘மையிருங்கூந்தல்’ (குறுந். 209) என்னும் அழகிய சிலவாகிய கூந்தல் ‘அம்சில் ஓதி’ (குறுந். 211) என்றும் ஐந்தாகப் பகுக்கப்பட்ட கூந்தலை ‘ஐம்பால்’ (குறுந். 229) என்றும் மயிலின் தோகையைப் போன்று தழைத்த மெலிந்த கூந்தலை ‘கலிமயில் கலாவத்தன்ன இவள் ஒலிமென் கூந்தல்’ (குறுந். 225) என்றும். பின்னலிடப்பட்ட கூந்தலை ‘பின்னவிடு கதுப்பு’ (குறுந். 246) என்றும் நறுமணம் மிகுந்த கூந்தலை ‘பயில் நறுங் கதுப்பு’(குறுந். 254) என்றும், அடர்ந்த கூந்தலை ‘பொம்மல் ஓதி’ (குறுந். 379) என்றும் திரண்ட கரிய கூந்தலை ‘குவை இரும் கூந்தல்’ (குறுந். 300) என்றும் கொடி போல நீண்ட கூந்தலையுடையவள் என்பதைக் ‘கொடிக் கூந்தலள்’ (குறுந். 132) என்றும் கரிய செறிந்த கூந்தலை ‘இரும்பல் கூந்தல்’ (குறுந். 165) என்றும், நெளியுள்ள கரிய கூந்தலை ‘ நெறி இருங் கதுப்பு’ (குறுந்.190) என்றும் புலவர்கள் பல்வேறு அடைமொழிகளால் தலைவியின் கூந்தலைச் சிறப்பித்துள்ளனர். ஆணின் தலைமயிர் ‘ஓரி’ (குறுந்.229) என்றழைக்கப்படுகிறது.

‘‘யான் நயந்து உறைவோள் தேம்பாய் கூந்தல்

விளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை

நுண்மணல் அறல் வார்ந்தன்ன

நன்னெறி யவ்வே நறுந்தண்ணியவே.” (குறுந். 116)

யான் நயந்த காதலியின் இனிமை தவழும் கூந்தல் சோழன் உறையூரில் உள்ள காவிரியின் ஆற்றுமணல் ஒழுகுவதைப் போல அழகிய சுருள் அமைந்தன; நறுமணமிக்க குளிர்ச்சியுடையன என்று தலைவன் தலைவியின் கூந்தலை,

படிப்படியான நீரோட்டத்தினால் மணலில் உண்டாகும் நெளிந்த சுவட்டோடு ஒப்பிடுவதைக் காண முடிகிறது.

நறுமணம் மிகுந்த தலைவியின் கூந்தல் பல பாடல்களில் சிறப்பிக்கப்படுகின்றன. 'என் காதலியின் கூந்தலைப் போல நறுமணமுடைய பூக்களும் நீ அறிந்தவற்றில் உளவோ? எனக் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியை வினவும் தலைவனை இறையனாரின் (குறுந். 2) பாடலில் காணமுடிகிறது.

மலர்களின் மணமிகுந்த கூந்தலழகு பல பாடல்களில் வருணிக்கப்படுகிறது. 'வெட்சித் தளையவிழ் பல்போது கமழும் மையிருங்கூந்தல், அகிலும் சந்தனமும் மணக்கும் ஆற்றோரக் கருமணல் போல நெளிந்த கூந்தல் குவளைப் பூ மணக்கும் கூந்தல் (குறுந். 209, 286, 300) எனக் கூந்தலின் மணத்திற்குப் பல்வேறு வகையான மலர்களும் அகில், சந்தனத்தின் நறுமணப் புகையும் காரணங்கள் ஆகின்றன. கபிலரின் பாடலில் (குறுந்.312) இரவில் தலைவனுக்கு ஏற்ற வகையிலும் பகலில் ஆயத்தாருக்கு ஏற்ற வகையிலும் தலைவி நடந்து கொள்ளும் போது, அவளுடைய கூந்தல் இரண்டு வகையான நறுமணங்களை பெற்றுத் திகழ்கிறது.

''இரண்டு அறி கள்வி நம் காதலோளே

முரண்கொள் துப்பின் செவ்வேய் மலையன்

முள்ளூர்க் கானம் நாற வந்து

நன்னென் கங்குல் நம் ஓரன்னள்

கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்

சார்ந்துளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி

அமரா முகத்தளாகித்

தமர் ஓரன்னள் வைகறையானே.'' (குறுந். 312)

'நம் காதலி இரண்டு விதமாக நடக்கத் தெரிந்த கள்வி. மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்க்கானம் போன்று நறுமணத்துடன் வந்து நடு இரவில் நம்முடன் ஒன்றியவள், விடியற் காலையில் நான் சூடிய பல வகையான மலர்களை உதிர்த்துவிட்டு, மயிற்சாந்து பூசி மாறுபட்ட மணத்துடன் சுற்றத்தாருடன் ஒன்றி அதற்கேற்ற தன்மையினன் ஆனாள்' எனத் தலைவன் வழியாகத் தலைவி களவுக்காலத்தில் தலைவன் சூடிய மலர்களை, இல்லில் உள்ளவர்கள் அறியாதவாறு மறைத்துக் கொள்வதையும், தலைவன் சூடிய மலர்களின் மணத்தை மாற்ற மயிர்ச்சாந்து பூசிக்கொள்வதையும் குறுந்தொகையில் காண முடிகிறது.

தலைவி, தலைவனுடன் சேர்ந்திருந்த வேளையில் மலர்கள் சூட்டிக்கொள்வதையும், பிரிந்திருந்த வேளையில் மலரணியாமல், பின்னலிடாமல் கொத்தாகக் கூந்தலை விட்டிருந்த நிலையை 'வறுங்குரல் கூந்தல்' (குறுந். 192) எனக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. எண்ணெய் நீவுதல் இன்றி ஒன்றோடொன்று பிணங்கிக் கற்றைச் சடையாகிய கூந்தலை 'வறுங்குரல் கூந்தல்' என ஒருபாடல் குறிப்பிடுகின்றது. (உ.வே.சா, 2009: ப.364) வையாவிக் கோப்பெரும் பேகனைப் பெருங்குன்றூர் கிழாரின் புறப்பாடலிலும் பேகனைப் பிரிந்த வேளையில், அவனுடைய மனைவி நெய் பூசாமல் மலர் அணியாமல் இருந்ததை அறிய முடிகிறது.

''அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை

நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்

மன்னுறு மணியில் மாசற மண்ணிப்

புதுமலர் கநல இன்று பெயரின்

அதுமன் எம்பரிசில் ஆவியர் கோவே.'' (புறம். 149)

செவ்வரி படர்ந்ததும் நீர் ஒழுகுவதுமாகிய கண்ணை உடைய அவள், நெய் பூசப்படாத கரிய கூந்தலைக் கழுவப்பட்ட நீலமணி போல விளங்கக் கழுவி, புதுமலர் பொலியச் சூடுமாறு இன்று இங்கிருந்து செல்க, அதுவே எம் பரிசில் எனப் பெருங்குன்றூர் கிழார் குறிப்பிடுகிறார்.

தலைவி மட்டுமல்லாமல், தலைவனும் தனது கூந்தலில் பூச்சூடுவதைக் குறுந்தொகை வெளிப்படுத்துகிறது.

''வெண்மணல் பொதுளிய பைங்கால் கருக்கின்

கொம்பைப் போந்தைக் குடுமி வெண்தோட்டு

அத்த வேம்பின் அமலை வான்பூச்

சுரிஆர் உளத்தலை பொலியச்சூடி.'' (குறுந். 281)

பனை மடலில் வேம்பினது பூக்களை வைத்து உச்சிக்கொண்டையில் சூடிக்கொண்டு குன்றுகளை உடைய காடுகளைக் கடந்து சென்ற தலைவனை இப்பாடல் காட்டுகிறது. மலர்களைப் பனந்தோட்டில் வைத்துக் கட்டிக் கொள்ளும் பழைய மரபினை புறப்பாடல்களும் (புறம். 100,265) காட்டுகின்றன. (உ.வே.சா, 2009: ப.518) வெட்சிப் பூவையும் வேங்கைப் பூவையும் பனந்தோட்டில் கட்டியதை (புறம். 100) யும் வேங்கை மலர்களை பனையோலையோடு தொடுத்துக் கோவலர்கள் நடுகல்லுக்குச் சூட்டி வழிபட்டதையும் (புறம். 265) புறநானூறு காட்டுகிறது.

கூந்தலுக்கு எருமண் தேய்த்து மகளிர் நீராடியதையும் குறுந்தொகை சுட்டிக் காட்டுகிறது.

‘‘ஊர்க்கும் அணித்தே பொய்கை; பொய்கைக்கு

சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே

இறைதேர் வெண்குருகு அல்லது யாவதும்

துன்னல் போகின்றால் பொழிலே யாம்எம்

தழைக்கு எருமண் கொணர்கம் சேறும்

ஆண்டும் வருகுவன் பெரும்போதையே.” (குறுந்.113)

‘பொய்கை ஒன்று எம்மூர்க்கு அண்மையில் உள்ளது. அதன் பக்கத்தில் சிறிய காட்டாறு உள்ளது. அங்குள்ள சோலையில் இரை தேடும் வெண்குருகு தவிர வேறு எவ்வுயிரும் அருகில் வராது. அங்கு நாங்கள் எங்கள் கூந்தலில் இட்டுத் தேய்த்துக் கொள்வதற்காக எருமண் எனப்படும் ஆற்றோரக் களிமண்ணை எடுக்கச் செல்வோம். தலைவி ஆங்கு வருவாள்’ எனத் தலைவனுக்குத் தோழி குறியிடம் உணர்த்துகிறாள். “எருமண் என்றது களிமண்ணை.” கூந்தலிலுள்ள எண்ணெய்ப் பசை, சிக்கு முதலியன போகும் பொருட்டுக் களிமண்ணைத் தேய்த்துக்கொண்டு மகளிர் நீராடுதல் வழக்கு. இதனைச் சிற்றூர்களில் இன்றும் காணலாம்.’ என்கிறார் (உ.வே.சா, 2009: ப.224)

‘‘இவன் இவள் ஐம்பால் பற்றவும் இவள் இவன்

புன்தலை ஓரி வாங்குளன் பரியவும்.” (குறுந்.229)

‘இவன் சிறு வயதில் இவனது கூந்தலைப் பற்றி இழுக்கவும், இவள் இவனது புல்லிய சிறிய தலைமுடியை வளைத்து இழுத்து ஓடவும் செவிலியர் இடைபுகுந்து விலக்கவும் விலகாது சண்டையிட்டுக் கொண்ட இவர்கள் இன்று இரண்டிரண்டு மலர்களாகச் சேர்த்து வைத்துக் கட்டிய மாலை போன்று உடன் போக்கில் மணந்து செல்வதற்குக் காரணமான ஊழே! நீ நல்லை ‘என ஊழ்வினையை வாழ்த்தும் கண்டோர் கூற்றுப் பாடலில் தலைவியின் கூந்தல் ஐம்பாலாகப் பகுக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என ஐந்து பகுப்புகளைக் கொண்ட கூந்தலை ‘ஐம்பால்’ என்றும் ஆணின் தலைமயிரை ‘ஓரி’ என்ற சொல்லாலும் இப்பாடல் குறிக்கிறது. (உ. வே.சா, 2009: ப. 428)

‘கொடிக் கூந்தலின்’ , ‘கலிமயில் கலாவத்தன்ன ஒலிமென்கூந்தல், ‘நறுமென் கூந்தல் மெல்லணை யேம்’, ‘பயில்நறுங் கதுப்பின் பாயல்’ என நீண்ட கூந்தல் எவ்வாறு புனையப்படுகிறதோ, அதுபோல அழகிய சிலவாகிய கூந்தலையும் ‘அம்சில் ஓதி’ (குறுந். 280) எனக் குறுந்தொகைப் பாடல்கள் புகழ்ந்துள்ளன.

நுதல் – கண் – எயிறு – தோள்

1. நுதல் :- கூந்தல் அடர்ந்து விளங்கும் அழகிய நெற்றி 'குழைவிளங்கு ஆய்நுதல்' (குறுந். 34) என்றும் குவளை மலர்களோடு காட்டு மல்லிகையும் சேர்த்துக் கட்டியதால் உண்டாகும் நறுமணம் மிகுந்த நுதல் 'குவளையொடு பொதிந்த குளவி நாறும் நறுநுதல்' (குறுந். 59) என்றும், ஒளி பொருந்திய நெற்றி 'ஒண்ணுதல்' (குறுந். 70) 'வாள்நுதல்' என்றும் , மணம் கமழ்கிற அழகிய நெற்றி 'தேம்கமழ் திருநுதல்' (குறுந். 205) என்றும் பலவாறு தலைவியின் நுதல் குறுந்தொகைப் பாடல்களில் புனையப்படுகிறது.

''மழை சேர்ந்து எழுதரு மாரிக்குன்றத்து

அருவி ஆர்த்த தண்நறுங் காந்தள்

முகை அவிழ்ந்து ஆனாநாறும் நறுநுதல்." (குறுந். 273)

'மேகங்கள் சூழ்ந்து மேலே எழும் மழைக்காலக் குன்றத்தில், அருவிநீர் படிந்த தண்ணிய நறிய காந்தள் மொட்டு முறுக்கவிழ்ந்து இடையறாது மணக்கும். அம்மலரின் மணம் நாறும் நெற்றி' என்றும்

''அல்குறு பொழுதில் தாதுமுகை தயங்கப்

பெருங்காட்டு உளரும் அசைவளி போலத்

தண்ணிய கமழும் ஒண்ணுதலோயே." (குறுந். 273)

'இரவில் அரும்புகளையுடைய பெரிய காட்டில் வீசி வருகின்ற காற்று எவ்வாறு நறுமணம் பெற்றுத் திகழுமோ, அதுபோல நறுமணம் கமழ்கிற நெற்றியை உடையோய்' என நுதலின் நறுமணமும் ஒள்ளிய தன்மையும் பல பாடல்களில் புலவர்களால் சிறபிக்கப்படுகிறது. தலைப்பகுதியில் மலர்மாலைகளைச் சூடியதால் நுதலும் மணமுடையதாய்த் திகழ்வதைக் காண முடிகிறது.

2.கண்:-கூந்தல், நுதலைத் தொடர்ந்து தலைவியின் கண்கள் பல பாடல்களில் புலவர்களால் புனையப்படுகிறது. பல இதழ்களை உடைய தாமரை போன்ற கண்கள், 'பல்லிதழ் உண்கண்' (குறுந்.5) என்றும் குவளை மலர் போன்ற கண்கள் 'குவளை அம் கண்ணே' (குறுந். 13) என்றும், பூப்போன்ற மையுண்ட கண்கள் 'பூப்போல் உண்கண்' (குறுந். 101) என்றும் 'பூங்கட் பேதை' (குறுந்.142) என்றும், 'பூவொடு புரையும் கண்' (குறுந். 226) என்றும் 'பல்லிதழ் மழைக்கண்' (குறுந்.259), 'மலர் ஏர் உண்கண்' (குறுந்.377) என்றும், தெளிந்த நீரில் நிற்கும் ஒள்ளிய மலரை ஒக்கும் தண்ணிய கண்கள் என்பதை 'தெண்ணீர் நிகர்மலர் புரையும் நன்மலர் மழைக்கணிற்கு எளியவால் பனியே' (குறுந். 329) என்றும் கண்கள் சிறபிக்கப்படுகின்றன. கயல் மீன்கள் ஒன்றையொன்று பொருவது போன்ற

மைதீட்டிய கண்கள் என்பதை 'பொருகயல் முரணிய உண்கண்' (குறுந்.250) என்றும் 'கயல் ஏர் உண்கண்' (குறுந். 398) என்றும் பாராட்டப்படுகிறது.

மழைக்காலப் பிச்சி மலரைப் போன்ற செவ்வரி படர்ந்த குளிர்ச்சி மிக்க கண்கள் என்பதை

''மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்

செவ்வெரின் உறழும் கொழுங்கடை மழைக்கண்." (குறுந். 222)

என்று ஒரு பாடலின் புலவர் புனைகிறார்.

''வில்லுடை வீனையக் கல் இடுபு எடுத்த

நனந்தலை கானத்து இனம் தலைப் பிரிந்த

புன்கண் மடமான் நேர்படத் தன்னையர்

சிலைமாண் கடுவிசைக் கலைநிறத்து அழுத்திக்

குருதியொடு பறித்த செங்கோல் வாளி

மாறுகொண்டன்ன உண்கண்." (குறுந்.272)

சிறந்த வில்லைவுடையவராய் சீழ்க்கை ஒலி எழுப்பிக் கொண்டு தன் தமையன்மார் கற்களை இட்டுத் தடுத்த அகன்ற இடத்தையுடைய காட்டில் இனத்தைப் பிரிந்த இருமான்கள் ஓடி வந்தன. அங்ஙனம் பிரிந்த துன்பத்தில் இளம்பெண்மான் நேரில் நிற்க, மிகுந்த வேகத்தையுடைய கலைமானின் மருமத்தில் அழுந்தும்படி எய்து இரத்தக்கறையுடன் பறித்த சிவந்த நீண்ட அம்புகள் ஒன்றுடன் ஒன்று எதிரே வைக்கப்பட்டது போன்ற மை தீட்டிய கண்கள் என்று கழறிய பாங்கற்குத் தலைவன் உரைக்கும் போது ஒரு பக்கம் செவ்வாளியைத் தலைவியின் கண்களுக்கு உவமையாக்கினாலும் மறுபக்கம் தலைவியின் தமையன்மாரின் வன்கண்மையைப் பாங்கனுக்குப் புலப்படுத்தும் விதமாகவும் பாடல் நயமுற அமைந்துள்ளது.

இவ்வாறு தலைவியின் கண்கள் தாமரை, குவளை, பிச்சிப்பூ, முதலான மலர்களோடும் கயல் மீனோடும் செங்கோல் வாளியோடும் ஒப்பிடப்படுவதைக் காணமுடிகிறது. கண்கள் அழகுபெற மைதீட்டப்பட்டிருப்பதையும் அறிய முடிகிறது.

3.எயிறு:-வரிசையாய் அமைந்த பற்கள், வெண்மையான பற்கள், கூர்மையான பற்கள், ஒளிவீசும் பற்கள் எனத் 'செறிஎயிற்று அரிவை' (குறுந். 2), 'நிரந்திலங்கு வெண்பல் மடந்தை' (குறுந். 52), 'முளைவாள் எயிற்று அமிழ்தம்' (குறுந்.52), 'முனைவாள் எயிற்றள்' (குறுந்.119), 'முள் எயிற்று அமிழ்தம்' (குறுந். 286), 'இலங்கு எயிறு என ' (குறுந்.381) தலைவியின் பற்கள் அவற்றின் வெண்மைத் தன்மைக்கும் கூர்மைக்கும்

பாராட்டப்படுகிறது. தலைவியின் தோள்கள் மூங்கிலோடு ஒப்பிடப்படுகின்றன. மென்தோள், பெருந்தோள், பணைத் தோள் எனத் தலைவியின் தோள்நலன் பருமைக்கும் மென்மைக்கும் பாராட்டப்படுகின்றன. தலைவியின் தோளில் தொய்யில் எழுதும் வழக்கத்தையும் குறுந்தொகை (குறுந்.384) குறிப்பிடுகிறது.

‘‘உழுந்துடைக் கழுந்தின் கரும்புடைப் பணைத்தோள்

நெடும்பல் கூந்தல் குறுந்தொடி மகளிர்.”

உழுந்தங்காயை உடைக்கும் உலக்கையின் திரண்ட நுனியைப் போன்றதும் கரும்பு வடிவைத் தொய்யிலாக எழுதியதுமான தோளினையும் நீண்டு திரண்ட கூந்தலையும் முன்கையில் தொடிகளையும் உடைய பரத்தையரை இப்பாடல் வருணிக்கிறது. காமனது வில்லாகிய கரும்பின் உருவத்தைக் குங்குமக் குழம்பால் மகளிர் தோளில் எழுதும் வழக்கத்தையே ‘தொய்யில்’ (உ.வே.சா, 2009: ப.678) என்பர்.

கண்ணி, தொடலை, தார், கோதை எனப் பல்வேறு வகையான மலர் மாலைகளையும் குறுந்தொகை குறிப்பிடுகிறது. தலையில் சூடும் மாலை ‘கண்ணி’ என்றும் ஆணும் பெண்ணும் மார்பில் அணிகிற மாலை ‘கோதை’என்றும் குறிப்பிடப்படுகிறது. இதனால் குவளை, வேங்கை, காந்தள், முல்லை மலர்களின் நறுமணம் வீசப்பெறும் மேனியாகத் தலைவியின் மேனி திகழ்கிறது.

‘‘மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை

இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து

பெரும்பெயல் விடியல் விரித்து விட்டன்ன

நறுந் தண்ணியளே நன்மா மேனி.” (குறுந்.168)

மழைக்காலத்துப் பிச்சிப்பூவின் நீர் சொட்டும் முதிர்ந்த மொட்டுகளை , பெரிய பசுமையான பனங்கூடையில் மிகப்பலவாக உள்ளே பொதிந்து மூடி வைத்து, பெரிய மழை பொழிந்த விடியற்காலத்தில் திறந்து விட்டால் வீடெல்லாம் எவ்வாறு மணக்குமோ அத்தகைய நறுமணமும் தன்மையும் உடையவள் தலைவி எனத் தலைவன் நலம் பாராட்டுகிறான். இயற்கையோடு இயைந்த வாழ்வில் பல்வேறு வகையான நறுமணமுடைய மலர்களைப் பெண்கள் குளிர்ச்சிக்காகவும் மணத்திற்காகவும் சூடியுள்ளனர். ஆண்கள் மார்பில் சந்தனம் பூசியவர்களாக விளங்குகின்றனர். ‘ஆரம் நாறும் மார்பினன்’ (குறுந்.198), ‘சாந்து புலர் அகலம்’ (குறுந்.150), சுனைப் பூங்குவளைச் சுரும்பு ஆர் கண்ணியன் (குறுந்.321) ஆகத் தலைவன் காட்சியளிக்கிறான்.

தலைவியின் மாமைக் கவினும் (மாந்தளிர் போன்ற மேனி) பல பாடல்களில் (குறுந். 27,62,132,168, 222, 259, 331) சிறப்பிக்கப்படுகிறது. நிறத்திற்கும் மென்மைக்கும் மாந்தளிர் உவமையாகச் சொல்லப்படுகிறது. 'மாயோய்' எனத் தலைவி அழைக்கப்படுகிறாள். 'முறியினும் வாய்வது' என முறி என்ற சொல்லாலும் (குறுந்.62) தளிர் குறிப்பிடப்படுகிறது. மலர்களும் தளிரும் தழையும் பழந்தமிழரின் வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றன.

ஆடையும் அணிகலன்களும்

ஆடையைக் கஞ்சியிட்டு அணிந்ததை குறுந்தொகைப் பாடல் (குறுந்.330) புலப்படுத்துகிறது.

''நலத்தகைப் புலைத்தி பசைதோய்ந்து எடுத்துத்

தலைப்புடைப் போக்குத் தண்கயத்து இட்ட

நீரின் பரியாப் பரூஉத்திரி காக்கும்

பேரிலைப் பகன்றைப் பொதிஅவிழ் வான்பூ." (குறுந். 330)

நல்லியல்புள்ள வண்ணாத்தி, கஞ்சிப்பசையில் தோய்த்து எடுத்து ஆடையில் தலைப் பக்கத்தை வீசி, தண்ணிய குளத்தில் இட்டனள். அவ்வாறு இட்ட போது நீரைவிட்டு பிரியாத பருத்தித் திரியைப் போல அவ்வாடை கிடக்கும் அதைப் போல முறுக்கிய பெரிய இலையை உடைய பகன்றைப் பூவைக் குறிக்குமிடத்துக் கழார்க்கீரன் எயிற்றியனின் இப்பாடலில் ஊடாக அக்கால வழக்கினை அறிய முடிகிறது. அதுபோலப் பெண்கள் தழையுடை உடுத்தியதையும் குறுந்தொகை எடுத்துக்க்காட்டுகிறது.

''உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்

தழையுணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி" (குறுந். 295)

என்ற வரிகளின் வாயிலாகத் தழைகளை உடையாக உடுத்தும் மாலையாகத் தொடுத்தும் காதணியாக அணிந்தும் தலையில் செருகியும் மகளிர் ஒப்பனை செய்துகொண்டதை அறிய முடிகிறது. மகளிர் இடைப் பகுதியில் தழையால் ஆன ஆடையை அணிந்தனர். 'தழையணி அல்குல்' (குறுந்.125) என்பதின் வாயிலாக இதை அறியலாம். களவுக்காலத்தில் தலைவன் தலைவிக்குத் தழலும் தட்டையும் பரிசாகத் தருவது போலத் தழையுடையையும் பரிசாகத் தருகிறான் . விளா, புன்கு, அசோக மரத்தின் தழைகளும் (குறுந். 214, 222, 293) வெள்ளாம்பலின் தழையும் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

''ஆயாவில் ஆம்பல் அம்பிகை நெறித்தழை

தித்திக் குறங்கின் ஊழ்மாறு அலைப்ப்

வருமே சேயிழை.” (குறுந்.293)

நீர்நிலையிலுள்ள வெள்ளாம்பலின் அழகிய நிறம் மாறுபட்ட முதிர்ந்த தழைகளுடன் தைக்கப்பட்ட தழையுடையை அணிந்து, தேமல் புள்ளிகளையுடைய தொடையின் கண் முறையே இடமாகவும் வலமாகவும் மாறி மாறி அசையும்படியாகப் பரத்தை நடந்து வந்த காட்சியை இப்பாடல் சித்திரிக்கிறது. குவளை மலரின் தழையும் இவ்வுடைக்குப் பயன்பட்டுள்ளது. (குறுந். 342)

பெண்கள் உச்சியிலிருந்து பாதம் வரை பல்வேறு அணிகலன்களை அணிந்துள்ளனர் இழைத்துச் செய்யப்படுவதால் இவ்வணிகலன்கள் ‘இழை’ எனப்படுகிறது. ஆயிழை, சேயிழை, வாலிழை, திருந்திழை எனப் பெண்கள் ஆராய்ந்து எடுக்கப்பட்ட, ஒளி பொருந்திய பொன்னால் ஆன அணிகலன்களை அணிந்துள்ளனர். கொடியும் வளையும் கையணியாகவும், குழை காதணியாகவும் மேகலை இடையணியகாவும், சிலம்பு காலணியாகவும் மகளிர் அணிந்ததையும் ஆடவர் தோளில் தோள்வளையையும் காலில் வீரக்கழலையும் அணிந்திருந்ததையும் குறுந்தொகைப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

1.கையணி:- சங்க கால மகளிர் பொன்னாலும் சங்காலும் ஆன வளையல்களை முன்கையில் அணிந்திருந்தனர். ‘வளையுடைய கையள்’ ,‘வளையோய்’ எனத் தலைவி விளிக்கப்படுகிறாள். செறிவளை (குறுந்.190) இலங்குவளை (குறுந். 36,125), தொகுவளை (குறுந்.15) வால்வளை (குறுந்.189) ஆய்வளை (குறுந்.211,316) இறை வளை(குறுந். 289) தோடுஆன் எல்வளை (குறுந்.216) , கைவளை (குறுந்.282) அரிவளை (குறுந்.260) நிரைவளை (குறுந். 335), எல்வளை (குறுந்.364) முதலான பல்வேறு அடைமொழிகளைப் புலவர்கள் வளையணியைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல்களைக் குறிக்க ‘கோடீர் இலங்குவளை’ (குறுந். 11) என்ற தொடர் அழைக்கப்படுகிறது. கொற்கை சங்கறுக்கும் தொழிலில் பெயர் பெற்று விளங்கிய நகரமாகத் திகழ்ந்தது. நக்கீரர் சங்கறுக்கும் குலத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுகிறார். (அ.இராகவன், ப.231)

கையணிகளுள் ஒன்றாகத் தொடியும் திகழ்கிறது. பண்டைய மகளிர் பலவகையான தொடிகளை அணிந்துள்ளனர். நண்டின் கண் போன்ற அறுப்பு வேலைகள் செய்த அழகிய கொடிகளைச் சிறு குழந்தைகளுக்கு அணிந்துள்ளனர். (மேலது, ப.231) நிரைகோல் குறுந்தொடி (குறுந்.267,356) செறிதொடி (குறுந்.379), தொடியோள் (குறுந்.296), பொற்கோல் அவிர் தொடி(குறுந்.364) முதலான அடைமொழிகளின் வாயிலாகத் தொடிகளை அணிந்த பெண்களைக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. பெண்கள் அணிந்த தொடி கையணியாகவும் ஆண்கள் அணிந்த தொடி தோளணியாகவும் கருதப்படுகிறது.

2.தோளணி:- கழல் தொடிஆஅய்' என ஆஅய் அண்டிரன் (குறுந்.84) குறிப்பிடப்படுகிறான். முற்காலத் தமிழகத்தில் வீரர்கள் தோள்களில் தொடிகளை அணிந்துள்ளனர். கழல்தொடி, கோல் தொடி என நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்ட அணிகலன்களைத் தமிழ் மறவர்கள் அணிந்துள்ளனர். (மேலது, ப.223)

ஆறலைக் கள்வர்கள் தோள் வளை அணிந்திருந்ததை குறுந்தொகைப் பாடல் (390) குறிப்பிடுகிறது. 'வளை அணி நெடுவேல்' ஏந்தியவர்களாகப் பாலை நிலக் கள்வர்கள் காட்சியளிக்கின்றனர்.

பெண்களும் தோள்வளை அணிந்திருந்தனர் தோள் வலயம், சாரிகை என இவ்வணிகலன் குறிப்பிடப்படுகிறது. தலைவனைப் பிரிந்த தலைவியர் தோள்வளைகளைத் துறந்துள்ளனர். இந்தத் தோள் வளை யானை மருப்பினாலும், சங்கினாலும் வெள்ளியினாலும் செய்யப்பெற்றுள்ளது. மாதவி மாணிக்க வளையொடு முத்து தோள்வளையும் அணிந்திருந்தாள் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. (மேலது, பக். 223-224). குறுந்தொகையிலும் 'வளை ஓர் மென் தோள்' (குறுந்.377) என இவ்வணி வழங்கப்பட்டுள்ளது.

3.மார்பணிகலன்கள்:-'மதர் எழில் பூண் ஆக வனமுலை' எனத் (குறுந்.348) தலைவி மார்பில் 'பூண்' எனும் மார்பணிகலன் அணிந்திருந்ததை ஒரு பாடல் குறிப்பிடுகிறது. இதய வாசனை, நாமரவளி, நித்திலமதானி, பூங்கொடிப் பொற்கலம், பொற்கச்சு முதலான பல்வேறு மார்பணிகளுள் பூணும் ஒன்று. இது இலைவடிவில் செய்யப்பட்டிருப்பதால் 'இலைப்பூண்' எனச் சீவக சிந்தாமணி குறிப்பிடுகிறது. (மேலது, ப.227)

4.இடையணி:- 'பொன்னொடு மணிமிடைஅல்குல்' (குறுந்.274) பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்டிருந்த அணியை இடைப்பகுதியில் தலைவி அணிந்திருந்ததை காண முடிகிறது.

5.காதணி:- பூங்குழையோய் (குறுந்.256), கனங்குழை மகளிர் (குறுந்.398) என மகளிர் காதில் குழையணியை அணிந்திருந்ததைக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. குழை வடிவமாகச் செய்யப்பெற்ற குண்டலத்திற்குக் 'குழை' என்ற பெயர் எழுந்தது. ஒண்குழை, கனங்குழை, பூங்குழை, மகரமீன் வடிவில் செய்யப்பட்ட மகரக்குழை எனக் குழைகளில் பல வகைகள் காணப்படுகிறது முற்கால மகளிர் கடிப்பு என்னும் அணியை இட்டுக் காதைப் பெரிதாக்கி, அதில் கனங்குழையை அணிந்தனர். 'கடிப்பிகு காதிற் கனங்குழை பெயர்' என பரிபாடல் குறிப்பிடுகிறது. பொன் குழைகளோடு அசோகன் தளிரையும் குவளை மலரையும் அணியும் வழக்கம் பழங்கால மகளிரிடம் காணப்படுகிறது. இதுவே பூங்குழை எனப்படுகிறது.(மேலது, பக். 198-199)

6. காலணி:- பெண்கள் காலில் சிலம்பையும் ஆண்கள் கழலையும் காலணிகளாக அணிந்ததைக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது.

‘‘வில்லோன் காலன கழலே – தொடியோள்

மெல்லடி மேலவும் சிலம்பே.” (குறுந். 7)

எனத் தலைவன், தலைவியரின் காலணிகள் சுட்டப்படுகின்றன. ஆடவர்களின் காலணியான கழல் வீரக் கழல், கொடைக்கழல், பொலன்கழல், எனப் பலவகைப் படுகிறது. மன்னர்கள் பகை அரசர்களை வென்று அவ்வரசர்களின் பொன்முடிகளால் கழலணி செய்து அணிவது வீரக் கழலாகும். பொன்முடிகளால் கழலணி செய்து அணிவது வீரக் கழலாகும். மன்னர்கள் வீரர்களும் புலவர்களுக்கும் கொடையாக வழங்கிய கழல் கொடைக்கழலாகும். பொன்னால் செய்யப்பட்ட கழல் பொலங்கழல் எனப்படுகிறது. (மேலது, ப.247)

பெண்கள் காலில் அணியும் நீண்ட வட்ட வடிவமான அணி ‘சிலம்பு’ ஆகும். இது ‘குடைச்சூல்’ என்றும் அழைக்கப்படுகிறது. புகலாக இவ்வணி செய்யப்பெற்று அதன் உள்ளே முத்தையும் மாணிக்கத்தையும் பரல்களாக இட்டு அணிந்திருந்ததை ‘சிலப்பதிகாரம்’ காட்டுகிறது.

‘‘உண்கிளி கடியும் கொடிச்சி கைகுளிரே

சிலம்பின் சிலம்பும் சோலை.” (குறுந். 360)

‘குளிர்’ என்னும் கிளிகடி கருவி காற்சிலம்பைப் போல் ஒலிக்கும் சோலை எனக் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. இவ்வாறு பல்வேறு வகையான அணிகலன்கள் அணிந்து பழங்காலத் தமிழர் தங்களை அழகுபடுத்திக் கொண்டனர்.

முடிவுரை

மனிதர்கள் தங்களை முருகியல் உணர்வோடு அழகுபடுத்திக் கொள்ளும் கலை ஒப்பனைக்கலையாகும். கட்டிடக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, சிற்பக்கலை எனப் பல்வேறு கலைகளில் தமிழர்கள் உயர்வு பெற்று விளங்கியது போல ஒப்பனைக்கலையிலும் சிறப்புற்றிருந்ததை தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகை தெள்ளிதின் எடுத்துக்காட்டுகிறது. கூந்தல் தொடங்கிப் பாதம் வரை அழகியல் உணர்வோடு தங்களை அலங்கரித்துள்ளனர். தொடியோள், வளையோய், கழலோன், ஆயிழை, சேயிழை, திருந்திழை என அணிகலன்களைக் கொண்டு தலைவன் தலைவியர் விளிக்கப்படுவதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. வெவ்வேறு பருவங்களில் பூக்கும் பல வகையான மலர்களை நறுமணத்திற்காகவும் மென்மைக்காகவும் குளிர்ச்சிக்காகவும் பயன்படுத்தியுள்ளதையும் காண முடிகிறது.

பார்வை நூல்கள்

References

இராகவன். அ, தமிழ்நாட்டு அணிகலன்கள், கலைஞன் பதிப்பகம், திருநெல்வேலி.1970

சாமிநாதையர், உ.வே, குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா நூல் நிலையம், சென்னை. 2009

தமிழண்ணல் (உ.ஆ), சங்க இலக்கியம் (தொகுதி -2) குறுந்தொகை, கோவிலூர் மடாலயப் பதிப்பு, கோவிலூர்.2022